குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 31 — 3 — 59 செவ்வாய் | இசை: 43

ஆடும் மயில்

தக தக,
என்றாடுமாம் மயில்
நன்றாடுமாம் களிப்பில்
நின்றாடுமாம் (தகதக என்றாடுமாம்)

மாலை வெயில் தனிமலர்ச்
சோலை தனில் நடமிடும்
நீல மயில் (தகதக என்றாடுமாம்)

கண்ணாயிரம் ஒளிவிடும்
மின்னாயிரம் மயில்அது
பெண்ணாய் வந்தே (தகதக என்றாடுமாம்)

பின்வாங்குமாம் அடகொடு
முன்வாங்குமாம் நடைமுறை
தென்பாங் கென்றே (தகதக என்றாடுமாம்)

மெச்சும்வகை மேனி
தச்சுக்கலை காட்டும்
பச்சை மயில் (தகதக என்றாடுமாம்)

பொன்னால்முடி புனைமயில்
மின்னால்விழி! அலகினில்
என்னே எழில் (தகதக என்றாடுமாம்)

மணிமா முகில் வளைகழுத்
தினைச் சூழவே அழகுற
அணிமா மயில் (தகதக என்றாடுமாம்)

அதிரும் படம் தங்கக்
கதிர் தூவிடும் உலகினை
மகிழ்வித் திடும் (தகதக என்றாடுமாம்)

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ பங்குனி ௧௮

கவிஞர் நினைவிற்கு!

எந்தன் உந்தன் எனத் தமிழில் சொற்களேயில்லை. இதை முன் ஒருமுறை விளக்கியுள்ளோம். இவ்வாறுள்ள பிழைச் சொற்களைப் படித்தவர்களே எழுதுவதென்றால், இராசகோபாலாச்சாரிக்கும் இவர்கட்கும் என்ன வேறுபாடு?

எம் என்பது பன்மைச்சொல் அதனோடு பன்மைக்குரிய தம் என்பதுதான் சேரும் எனவே எந்தம் என்றுஎழுதவேண்டும். உந்தம் என்பதும் அப்படியே.

என் என்பதும் உன் என்பதும் ஒருமைக்குரியவை இவற்றோடு ஒருமைக்குரிய தன் சேரவேண்டும் எனவே என்றன் உன்றன் என எழுதவேண்டும்.

★ ★ ★

போக, வர, இருக்க, என-இவ்வாறு வரும் சொற்களுக்குச் செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் அல்லது (சுருக்கமாகச்) செயவெனெச்சம் என்பார்கள் இவற்றின்முன் வல்லெழுத்துக்கள் அவையாவன க, ச, த; ப என்பவை வந்தால் மிகவேண்டும். எப்படி?-

போக + கண்டான் = போகக்கண்டான். வரச்சொன்னான் இருக்கத்தின்றான், எனப் பகர்ந்தான் என.

க, ச, த, ப என்று கூறினால் (க) கா. கி முதலியவற்றையும் (ச) சா, சி முதலியவற்றையும் த) தா. தி முதலியவற்றையும் (ப) பா. பி முதலியவற்றையும் குறிக்கும்.

கவிதை எழுதக் கசடறக் கற்க.

என்பது அகவலடி. இதில் எழுத என்னும் செயவெனெச்சத்தின் முன் க என்ற வல்லெழுத்து வந்ததால் எழுதக்கசடற என மிகுந்தது. அறக்கற்க என்பதில் அற என்பது செயவெனெச்சம்! அதன்முன் க என்ற வல்லெழுத்து வந்ததால் அறக் கற்க என மிகுந்தது.

அழகுக் கழகு கூட்டுவார் போலக்
குழந்தைக்குப் பன்மணி இழைகள் கூட்டினர்

என்பது அகவலின் இரண்டடி. முதலடியின் கடைசியில் உள்ள போல என்பது செயவென் எச்சம். அதன்முன் இரண்டாம் அடியின் முதலிலுள்ள வல்லெழுத்து வந்தது; அதனால் போல + குழந்தை போலக் குழந்தை என மிகுந்தது.

கவிஞர்கள் சிலர்- பாட்டில் வரும் ஓரடியின் கடைசிச் சொல்லையும் அடுத்த அடியில் வரும் முதற்சொல்லையும் தொடர்பு படுத்திப் பார்ப்பதேயில்லை. அப்படியானால் இவர்கட்கும் சுதேசமித்திரன் தினமணிகட்கும் என்ன வேறுபாடு?

★ ★ ★

அகரத்தை அதாவது அ என்பதை ஈற்றிலுடைய சில சொற்களின்முன் வல்லினம் (க, ச, த, ப) வந்தால் இயல்பாகும்என்பதற்கு. நன்னூற் பாட்டு ஒன்றுண்டு. அது:

செய்யிய என்னும் வினைஎச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம் முற்று, ஆறனுருபே
அஃறிணைப் பன்மைஅம்ம — முன் இயல்பே.

செய்யிய சென்றான் என்பதில் செய்யிய என்பது வினையெச்சம். உண்ணிய, காணிய என்பன முதலியனவும் அவ் வினையெச்சங்களே. செய்யிய சென்றான், உண்ணியபோனான் காணியசென்றான் என இயல்பாகும்.

வந்த குதிரை வருகின்ற குதிரை என்பனவற்றில் உள்ள வந்த வருகின்ற என்பன குதிரை என்ற பெயரைக்கொண்டு முடிவதால்- வந்த வருகின்ற என்பன பெயரெச்சங்கள்.

இவற்றின்முன் வல்லினம் வந்தால் வந்தகுதிரை என இயல்பாகும். வந்த, வருகின்ற, போகின்ற, போன என்பன போன்றவையும் பெயரெச்சச் சொற்களே.

வந்தன குதிரைகள். வருகின்றன குதிரைகள் என்பனவற்றில் வந்தன வருகின்றன என்பவை முற்று. வந்தாள் வந்தான் வந்தார் வந்தது எனப் பல முற்றுக்கள் உள்ளன-அவைகளைப்பற்றி இங்கே பேச்சில்லை. அகரத்தை இறுதியாக உடைய வந்தன முதலியவைகளைப் பற்றித்தானே இங்கே கூறவந்தது.

வந்தன குதிரை இடையில் ஒற்றுமிகாது வந்தனகுதிரை என்றே எழுதவேண்டும்.

செய்தன செய்கின்றன உண்டன உண்ணுகின்றன அனைத்தும் முற்றுக்களே.

தனகைகள் என்றது தன்னுடைய கைகள் என்ற பொருளுடையது. தன என்பதன் இறுதியில் உள்ள அ, ஆறும் வேற்றுமையின் பன்மையுருபு. இதன் முன் வல்லினம் வந்தால் இடையில் ஒற்றுமிகாது. தன கைகள் என்று இயல்பாகும். என உன என்பன அனைத்தும் ஆறன் உருபைக்கொண்டனவே.

அம்ம கொற்றா என்பது இடைச்சொற்றொடர்; அம்ம என்பது வியப்பைக்குறிக்கவரும் இடைச்சொல். இடையில் ஒற்றுமிகாது.

அம்ம தேவா - அம்ம பூதா என்பனவும் அவையே.

★ ★ ★

க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று இவைகளைக் கடைசியில் வைத்துக்கொண்டு வருகின்ற சொற்கள் அனைத்தும் வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களாகும், சுக்கு, பாக்கு, தச்சு, நீச்சு, பட்டு, பாட்டு, முத்து, கூத்து, உப்பு, காப்பு, புற்று நேற்று என்பனவும் இவைபோல் வன பிறவும் வன்றொடர்க்குற்றியலுகரச் சொற்களே. இவற்றின் முன்வரும் வல்லெழுத்து மிகும் - எப்படி ?

சுக்குத் தின்றான், பாக்குப்போட்டுக் கொண்டான். தச்சுப் பொருள், நீச்சுப் பந்தயம் என. சுக்குதின்றான் என்று வரவே வராது.

போயிற்றுக் குதிரை என்பதில் போயிற்று என்பதும் வன்றொடர்க் குற்றியலுகரமே. ஆயிற்று. கூவிற்று. என்பனவும் அவையே.

ஆயினும் கூப்பு கை, நாட்டு புகழ், என்பன மேற்சொல்லியதுபோல் மிகாது. கூப்பு கை, நாட்டு புகழ் என இயல்பாகவே இருக்கும். ஏன் எனில்,

கூப்பு கை. நாட்டு புகழ் என்பன வினைத்தொகை நிலைத்தொடர்கள். கூப்பு கை என்பது கூப்புகின்ற கை கூப்பிய கை கூப்பும் கை என மூன்று காலத்துக்கும் ஒத்து வருவனவெல்லாம் வினைத்தொகை. நாட்டு புகழ் என்பதும் அப்படி.

கூப்புக் கை நாட்டுப் புகழ் என்று போடவே கூடாது. நாட்டின் புகழ் என்ற பொருளில் ப் இடையில் போடலாம்.

அங்கு, இங்கு, உங்கு, ஆங்கு, ஈங்கு ஊங்கு எங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு யாண்டு என்பவை, இடப் பொருளில் வரும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள். இவைகளின்முன் வரும் வல்லினம் மிகும். எப்படி? அங்குக் கண்டான் இங்குச் சேர்ந்தான் ஆண்டுச்சென்றான் ஈண்டுப் போந்தான் என.

★ ★ ★

ஆங்கு அவன்தான் அழகு அழித்தான்

ஒருவர் எழுதிய அகவல் அடி இது.

அகவல் அடியில் நான்கு சீர்கள் வர வேண்டும். இதில் அப்படி நான்கு சீர்கள் வந்துள்ளனவா எனில் இல்லை. ஏன்? ;—

ஆங்கு + அவன் = ஆங்கவன் என்று புணர வேண்டும். இப்படிப் புணர்த்தவே இரண்டு சீரும் ஒரு சீராகிவிட்டது. அழகு அழித்தான் என்பன அழகழித்தான் எனப் புணரும். எனவே,

ஆங்கவன் தான்அழ கழித்தான் என மூன்று சீர்தாம் உள்ளன. இன்னும் ஒருசீர் வேண்டும் எங்கே போவது! பிழைதானே?

இந்த அடியை எப்படித் திருத்தினால் பிழையிராது எனில்,

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

பதம்

இது வடசொல்லன்று. பகுதலின் மரூஉ வாகிய பதல் என்பதன் அடியாகிய பது அம்முச் சாரியை பெற்றுத் தகரத்தொகுத்தல் உற்றது. பதம் சிறப்பாய் உயர்பதத்தைக் குறிக்கும் - ஒரு நிலையினின்று மற்றொரு நிலையடைந்த ஒன்றை யும் குறிக்கும். பதம் சோற்றுக்கும் பெயர். சோறு நிலைதிரிந்ததன்றோ. மற்றும் இடம் இன்பம் முதலியவைகளைக் குறிக்கும்போதும் இவ்வாறே காரணம் அறியப்படும் எனவே பதம் தூயதமிழ்க் காரணப் பெயர் என்க.

இதை வடவர் தமிழினின்று எடுத் தாண்டனர்.

கலசம்

கலயம் என்ற தமிழ்ச்சொல் கலசம் என வடவரால் திரிக்கப்பட்டது. எனவே கலயம் என்பதினின்று கலசம் தோன்றியது.

கல் + அகம் = கல்லகம்; இதன் மரூஉ கலம் கல் + அகடு = கலடு; கன்னிலம் ஆனது நோக்குக. கலம் இடையகரம் பெற்றுக் கலயம் ஆனது. கல்லைக்குழிவு செய்தது கலம், கலயம் என்று காரணம் கண்டுகொள்க. குழிசி கல்லைக் குழிவு செய்தது என்ற இடத்துப்போல, கல்லை என்பதும் கல்லியது என்ற பொருளில் அமைந்ததேயாகும் வடவர் திரித்ததால் அதை நாம் மேற்கொள்ளவேண்டா. கலயம், கலம் என்றே எழுதுக.

குண்டம்

தூய தமிழ்க் காரணப் பெயரே, தமிழி னின்று வடவர் எடுத்தாண்டனர், ஓமகுண்டம் என்பதில் காண்க.

குண்டு-குளம் அதுபோல் அமைந்தது. குண்டை-குண்டுசட்டி, குண்டான், குண்டம்! குண்டம்- ஆழக்கல்லிய இடம். ★

ஆங்கே அவன்தான் அழகை அழித்தான் எனில் பிழை நேராது.

சொற்களைப் பிரித்து. எளிதில் பொருள் விளங்குவதற்காக எழுதுவதாய் நினைக்கின்றனர் கள். பிரித்து எழுதலாம் அதை புணர்த்துப் பார்க்கும்போது அளவு குறையக்கூடாது.

இந்தப் பிழைகளைப் புகழ்பெற்றவர் என்று கருதப்படும் கவிஞர்களும் செய்கின்றனர்கள்.

மரத்தில் அதோபார் பறவைக் கூடு
அதுமிக அழகாய் இல்லையா அண்ணே

என்பன அகவல் அடிகள். இவற்றுள் முதலடியின் கடைசிச் சொல் கூடு என்பது அது குற்றியலுகரம். அடுத்த அடியின் முதலில் உள்ள அது என்பதில் உள்ள அகரத்தோடு புணரவேண்டும். கூடு + அது = கூடது என்று, எனவே கூடு என்பதன்-டு இல்லாமற் போகின்றது, கூ மட்டும் மிஞ்சுகின்றது.

மரத்தில் அதோபார் பறவைக் கூ என்றால் கூ மட்டும் ஒரு சீரல்ல. இன்னும் ஓரெழுத்தா வது வேண்டும், மரத்தில் அதோபார் பறவைக் கூடே என்று திருத்திக் கொண்டால் பிழை நேராது.

எழுதுவார்க்கு....

குயிலுக்குக் கட்டுரையோ கவிதையோ எழுதுகின்றவர் அத்துடன் தன் முழு முகவரி எழுதுவதோடு - குயிலுக்குரிய தம் சந்தா எண் அல்லது குயில் விற்பனையாளரிடமிருந்து, குயில் வாங்குவதைக் காட்டும் நற்சான்று குறித்து அனுப்பக் கோருகின்றோம்

அப்படி இல்லாத செய்திகள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

தலைநகரில் தமிழ் எங்கே?

மா. இராம. தமிழ்ச்செல்வன், ஒலக்காசி.

ஒருநாள் சென்னைக்குச் சென்று நண்பர் நாவரசு வீட்டில் தங்கினேன். மாலை மணி மூன்று. இருவரும் சென்னையைச் சற்று சுற்றிப்பார்த்துவிட்டு வருவோமென்று புறப்பட்டோம்.

அழகிய நெடுஞ்சாலை! அந்நெடுஞ்சாலையின் இருபுறமும் வானைமுட்டும் மாளிகைகளும் கற்கட்டடங்களும் நிறைந்திருந்தன இச் சாலையின் பெயர் என்னவோ என ஆவல்கொண்டு 'இதற்குப் பெயர் என்ன' என்றேன்.

இதன் பெயரா? மவுண்ட் ரோட் என்றார்!

இந்தப் பெயர் இன்னும் உள்ளதா என ஆச்சரியத்துடன் கேட்டேன் அதற்கு அவர் நீர் சென்னைக்கே புதிதுபோல் தோன்றுகிறது. இதை என்ன கண்டாய்! இன்னும் பல வீதிகளின் பெயர் அப்படியே உள்ளதே! 'பாரீஸ் கார்னர்' என்றும், 'வால்டாக்ஸ் ரோட்' என்றும் 'எல்டாமஸ் ரோடு' என்றும், 'எஸ்பிளனேடு' என்றும் இன்றும் உள்ளதே என்றார்.

அதற்கு நான் ஒருவேளை இங்குப் பல்வேறு மொழியினரும் பல்வேறு இனத்தாரும் இருப்பதால் இந்தப்பெயர்கள் இன்னும் உள்ளனவோ என்றேன்.

நன்றாகச் சொன்னீர்கள் நம் பழங்காலத்தில் காவிரிப் பூம்பட்டனக் கடற்கரையில் இந்திர விழா நடக்கும்போது பல்வேறு மொழியினரும் அங்கு வந்து ஒன்றாகக் கூடுவார்களாம். அவர்கள் வைத்திருந்த கடைவீதிகளின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும் என இளங்கோவடிகள் கூறுகின்றார்.

ஒருபுறம் வண்ணச் சுண்ணமும் குளிர்ந்த நறுமணம் வீசும் சந்தனமும், ஒருபுறம் பட்டும், பவளமும் மாசறுமுத்தும், மணியும், பொன்னும் ஆரமும் அகிலும் விற்போரும் இன்னொருபுறம் பட்டாலும் ரோமத்தாலும் ஆடைகள்நெய்து விற்போரும் பிட்டு வணிகரும், அப்பம் சுடுவோரும், கள்விற்கும் வலைச்சியரும், மீன் விற்கும் பரதவர் ஒருபுறமும், வெள்ளிய உப்புவிற்போரும் வெற்றிலைவிற்போரும் வெண்கலக் கன்னரும் செப்புப் பாத்திரம் செய்வோரும் இப்படிப்பல கடைவீதிகள் வைத்துப் பல்வேறு இனத்தார் நம் நாட்டிற்கு வாணிகம் செய்திருந்தபோதிலும் அன்று தமிழ் நாட்டு வீதிகளில் தமிழ்ப்பெயர்தான் இருந்தன என்றார்.

அப்படியானல் அன்றைய உலகமொழி தமிழ் மொழியாகத்தான் இருக்கவேண்டும். எந்நாடு சென்றாலும் தமிழ்க்கொடியை பறக்கவிட்டு தமிழின் பெருமையை பிறர்க்கு உணர்த்தினர்கள் போலும் அதனால்தான் பிறமொழியின்மீது அவர்கள் நாட்டம் கொள்ளவில்லையோ என்றேன்.

அதற்கு அவர், நீங்கள் சொல்லுவது சரிதான்! அன்றைய புலவர்களும் புரவலர்களும் தமிழை வளர்க்கவே பெரும்பாடு பட்டனர் அதனால்தான் தமிழ் வளர்ந்தது. இன்றும் வாழ்கின்றது.

அன்றைய மக்கள் பிற மொழிகளைத் தமிழில் கலந்திருந்தால் இன்று தமிழ் இருந்திருக்காது. நாமும் தமிழன் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளமுடியாது. அப்படி ஏற்பட்டிருப்பின் இன்று கலப்பட மொழிக்காரர்களில் நாமும் ஒருவர் என்ற வரிசையில் சேர்ந்திருப்போம். சரி! காலம் கடந்து செல்லுகிறது விரைவாக வாருங்கள் சற்றுக் கடற்கரைபக்கம் போவோம் என்றார். நானும் அவரைப் பின் தொடர்ந்தேன்.

கடலலைகள் சிறிது சிறிதாக மணலைக் கொண்டு வந்து கரையோரம் பெரிய மணற்குவியலைச் சேர்த்திருந்தது. அந்தப் புதிய மணற்பரப்பில் நாங்கள் இருவரும் சற்று உட்கார்ந்தோம். இந்தக்கடல் தமிழ் நாட்டிற்குப் பெரிய வேலி என்கிறார்களே எவ்வளவு பொருத்தம்! இந்தக்கடலில் தான் அன்றைய மூவேந்தர்களின் விற்கொடி கொண்டகப்பலும், மீன்கொடி கொண்ட கப்பலும், புலிக்கொடி கொண்டகப்பலும் மிதந்து சென்றிருக்கும் என்று என் மனதில் எண்ணியவாறு இருந்தேன். இவ்வழகிய கடற்கரைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்கள் எனக்கேட்போம் என்றெண்ணி கடற்கரையின் பெயர் என்ன? என்றேன்!

'மெரினா பீச்' என்றார்!

சரிதான் இத்தலைநகரில் தமிழைக் காண முடியாது போலும்! சற்றுவாருங்கள் சிற்றுண்டிச் சாலைக்காவது சென்று வருவோம் எனக் கூப்பிட்டேன். சிற்றுண்டிச்சாலையின் பக்கத்தில் பெருங் கரும்

(தொடர் 12-ம் பக்கம்.)

தெரியாமலா சொன்னார் பெரியார்!

க. கு., மணமேடு.

ஒருதொழிலின் தலைமையினில் நானி ருந்தேன்
உதவிசெய்ய ஓரிருவர் வேண்டு மென்று
பெருமுறையில் அறிவித்தேன் விண்ணப் பங்கள்
பலப்பலவாய் வந்துளவே பொறுக்கு நாளில்
ஒருதமிழன் ஒருபார்ப்பான் ஆகி யோரை
எடுத்தென்றன் துணைக்கமர்த்திக் கொண்டேன்
[அந்த
இருவரிலும் மிகத்துணையாய் இருந்தோன்
[பார்ப்பான்
என்றமிழன் வாய்பேசான் ஒதுங்கி நிற்பான்.

இங்ஙனமாய்த் திங்கள்பல செல்லும். பார்ப்பான்
என்னருகே மிகநெருங்கிப் பணியைக் கட்டித்
தங்கமெனக் கற்றுவிட்டான். தமிழன் மட்டும்
தானுண்டே பணியுண்டே என்றி ருந்தான்
சிங்கமென என்பணியில் நானி ருந்த
சமயத்தில், நற்பொழுதில் மேலி டத்தார்
எங்கிருந்தோ சிறுபேச்சைக் காதிற் கேட்டே
"இனிவேலை உமக்கில்லை" என்றார். சென்றேன்

யாருரைத்த சூழ்ச்சியிதோ! பிறக நிந்தேன்
யானுமக்கே துணையென்ற பார்ப்பா னென்று
சீருறவே நானிருந்த தலைமை தன்னைச்
சிறுபார்ப்பான் சிலநாளில் பெற்றான். அங்குப்
பேருறவே உடனிருந்த தமிழன் மேலும்
பலகேடு சூழ்ந்தகற்றி விட்டான். பின்னர்
வேறொருவன் அப்பணிக்கு வந்தான், அங்கும்
வந்தவனோர் பார்ப்பான்தான்! விந்தை! சூழ்ச்சி

இப்படியே செயல்புரிந்து பார்ப்பான் நாளும்
இனத்தவரைச் சேர்த்துவிட்டான் மேலும் மேலும்
முப்புரிகள் கூட்டத்தில் மூன்று சேர்ந்தால்
முளைக்காதோ ஓரிடத்தில் சூழ்ச்சி யாட்சி!
ஒப்புயர்வே இல்லாமல் ஓர்கா லத்தில்
உயர்ந்திருந்த தமிழாஉன் வேகம் எங்கே?
எப்படித்தான் நீவாழப் போகின் றாயோ!
இனிமேலும் பார்ப்பனனை நம்பு வாயோ?

பார்ப்பனனை ஐயனென்ற காலம் மட்டும்
போயிற்றாம் அவன்செய்த சூழ்ச்சி யை,நாம்
சேர்க்கவில்லை இதுவரையில் புதைக்கு ழிக்குள்
சேர்க்கின்றோம் அவனோடே தமிழா மோதி
ஆர்ப்பரிக்கும் கடல்மட்டும் சங்க நூலை
அழிக்கவில்லை ஆரியனும் செய்தான் வெற்றி
போர்த்தஉயர் தமிழாஉன் பண்பு வீரம்
போனஇடம் பிணக்காடோ! உணையு ணர்வாய்

நரிபோன்ற செயலெல்லாம் செய்தால் கூட
நம்தமிழன் தமிழன்தான் ஆனால் பார்ப்பான்
சரியாக ஒருசெயலைச் செய்தா னென்று
சொல்லிவிட ஒன்றில்லை சூழ்ச்சி யன்றி!
புரியாமல் இன்னும்நீ இருந்தால் நந்தம்
புகழ்சாகும் காலம்வெகு தூர மில்லை
தெரியாம லாபெரியார் சொன்னா ரிந்தத்
திருக்கூட்டம் தமிழ்க்குலத்தைத் தொலைக்கு
மென்று!

தமிழா! தமிழா!!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்.

கறைபட்டுப் போயிற்று நமதுபுகழ்! வந்தோர்
கால்வருட லானாய்நீ; தமிழர்நா டென்னும்
முறைகெட்டுப் போயிற்றுத் தன்நாட்டை வேறோர்
முழுமூடன் முன்வைத்துக் காத்திடுக என்றே
திறைகட்ட ஒப்பினையே! திறங்கெட்டுப் போனாய்!
செந்தமிழா நம்நாட்டை மீட்டிடவே வெற்றிப்
பறைகொட்டி எழுவாய்நீ! எழும்பரிதி முன்னே
பனியெனவே பகைமாளும்; உனதுரிமை மீளும்!

என்னைப்போல்பறந்துலவும் உரிமைஉனக்குண்டோ
எனுமாறு பறக்கின்ற செக்கர்வாய்க் கிள்ளை
தன்னைப்போல் ஆறறிவு படைத்தவன்நீ இன்னல்
தவிர்த்தின்பம் விடுதலையால் அடைந்திடுதல் கூடும்!
பொன்னைப்போ லாம்தமிழைப் பித்தளையா தென்றார்
பொறுத்திருப்போம் காலம்வரும் என்கின்றா யேநீ!
உன்னைப்போல் நாடாண்டோன் ஒட்டாண்டி ஆன
ஒருகதையும் இதுவரையில் நான்கேட்ட தில்லை!

வாய்ப்பான வேளையைநீ நோக்கிடுதமிழ் தன்னை
வளமற்ற மொழியென்றே தினந்தினமும் சொல்லி
மாய்ப்பாரை வென்றிடவே! வரிப்புலியே உன்றன்
வடுப்பட்ட புகழைநிலை செய்க! தமி ழென்னும்
தாய்ப்பாலை உண்டவர்நாம் எனும் எண்ணத்
[தோடே
தமக்குவமை இல்லாத தமிழர்திறம் காட்ட
வாய்ப்பந்தல் போடாமல் நீஎழுவாய்! வெல்வாய்!
மதியில்லார் சொல்கேட்டல் வழக்கமெனக்
[கொண்டாய்;

செல்லாத காசுக்கு மதிப்பினைநீ தந்தாய்!
சென்னையினை ஆள்கின்றாய்! ஊர்க்கொள்ளை
[கொள்ளும்
பொல்லாத தில்லிக்குக் கைகட்டி நின்றாய்!
'பொறுத்துப்பார் துன்பத்தை' என்கின்றார்—
[இன்னல்
இல்லாத நாளுண்டோ உன்றன்வாழ் நாளில்?
இன்பமுனக் கெட்டாத கனியாதல் கண்டும்,
நில்லாத பொருளைநீ நிலையென்றே எண்ணி
நினதடியே 'சரணமென' ஒருவனடி சேர்ந்தாய்!

சென்றஇதழ்த் தொடர்ச்சி

மீட்சிப் பத்து

(கட்டளைக் கலித்துறை)

மெய்யேந்தித் தோளினில் வேலேந்தி வாழ்ந்த தமிழரிடம்
கையேந்தி, வேந்தரின் காலேந்தி ஏந்திக் கயல்விழியால்
மையேந்து மாதர் இதழினை மன்னர்கள் உண்ணஏந்திப்
பொய்யேந்தும் ஆரியர் நாட்டின்கோல் ஏந்தவும் போந்தனரே!

முந்தைக்கு முந்தை அதன்முந்தை ஆட்சி முறைவகுத்த
எந்தைக்குத் தந்தை அவன்தந்தை யின்தந்தை பெற்றபுகழ்,
கந்தைக்கும் சோற்றுக்கும் இல்லாமை தன்னிற் கரைந்திடில்என்
மைந்தரின் மைந்தர்க்கு வைப்பேன் விடுதலை வாழ்வினையே!

விழிக்குத் தெரிந்த தமிழகம் இல்லையாம் - மேலுமிந்த
மொழிக்குச் சிறந்த தமிழ்முதல் இல்லையாம் முன்னவரின்
வழிக்கென்று யாதும் வரலாறும் இல்லையாம் ஆரியரைப்
பழிக்குப் பழிவாங்கல் அன்னாரின் ஆட்சி பறிப்பதுவே!

தமிழரின் மேன்மை இகழ்ந்த வடக்கர் தறுக்கடக்கி
அமைந்தனர் மூவேந்தர்; அன்றே அவரை அழித்திருந்தால்
இமையம் பிறந்திடு முற்பிறந் திட்டஇன் பத்தமிழைத்
தமது வடமொழி தந்ததென் றார்அச் சழக்கர்களே!

நாவலந் தீவே நமது! பிறகு நலைமஅடைந்த
பாவிகள் ஆரியர் கூலியாய்க் கூட்டிக் கொடுப்பவராய்
மேவினர் நம்மடி, மெல்லவே நம்தலை மேலுமுற்றார்;
யாவையும் வவ்வினர் ஈவதுண் டோதமிழ் நாட்டையுமே!

சிறுகதைப் பகுதி.

புலவர் முண்டைக்கண்ணி ஆம்படையான்

புலவர் ஒருவர்க்கு இயற்பெயரே மறைந்து விட்டது. அவரைத் தெருவாரும் ஊராரும் முண்டைக் கண்ணி ஆம்படையான் என்றே அழைப்பார்கள்.

முண்டைக்கண்ணி ஆம்படையான் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இட்டளியும், சுவைநீரும் உட்கொண்டு மைலாப்பூருக்குச் செல்லுவார்.

மைலாப்பூரில் அவர் நுழையும் தெருவுக்கு வடக்குமுனை தெற்குமுனை உண்டு: அவர் வடக்கு முனையால் நுழைந்தால் அவருக்கு முதலில் கிடைப்பது பணக்காரர் பழனியாண்டி வீடு: தெற்குமுனையால் நுழைந்தால் பார்ப்பனர் பஞ்சுவீடு இரண்டு வீடுகளும் அண்டையில் அண்டையில் அமைந்தவை.

புலவர் பார்ப்பனரிடம் ஐயர் என்பதன் பொருள் மேலானவர்; ஐ என்பது மேன்மை அது பலர்பால் இறுதிநிலையாகிய அர் பெற்று ஐயர் என முடிந்தது என்பார். அவரிடம் ஆக வேண்டியதை முடித்துக்கொண்டு பணக்காரர் பழனியாண்டியிடம் வருவார் ஐயர் என்றால் பிச்சையெடுப்பவர்; ஐயம் பிச்சை; அது அர் பெற்று ஐயர் ஆயிற்று என்று கூறி ஆக வேண்டியதை முடித்துக்கொண்டு போவார்.

இன்னொருநாள் பார்ப்பனரிடம் ஐயர் என்ற சொல் ஆரியர் என்ற சொல்லின் திரிபே என்பார். அதே தொடர்பாகத் தமிழரிடம் ஓடி ஐயர் என்ற தமிழ்ச்சொல்லுக்கும் ஆரியருக்கும் தொடர்பே இல்லை என்பார்.

மற்றொருநாள் செல்வார் தமிழ் ஆரியத்தின் பிள்ளை என்பார் பார்ப்பனரிடம் அவரால் ஆக வேண்டியதைப் பெற்றுக்கொண்டு கையோடு கையாகத் தமிழரிடம் வந்து, ஆரியம் தமிழின் குழந்தையே என்று ஆதாரம் காட்டி ஐந்தோ பத்தோ வாங்கிக்கொண்டு போவார்.

ஒரு பல்கலைக் கழகத்தில் தலைமைப் புலவர் இடம் மிகுதிப் பட்டதைக் கேள்விப்பட்ட முண்டைக்கண்ணி ஆம்படையான் ஐயரிடம் சென்று அந்த இடத்தை முடித்துவைக்க வேண்டும் என்றார். ஐயரும் ஒத்துக் கொண்டார்.

மறுநாள் புலவருக்குக் கண்நோய் கண்டு விட்டது. இரண்டு கண்ணுக்கும் மருணீக்கியார் மருந்திட்டுக் கண்களுக்கும் கறுப்புத்திரை போட்டனுப்பினர். புலவர் வண்டியேறிமைலாப் பூர்த் தெருவின் வடக்குமுனையால் நுழைந்தார், உட்காருமுன்னமே தம் அரிய கண்டுபிடிப்பை வெளியிடத் தொடங்கி, என் ஆராய்ச்சியில் தமிழர் என்போர் பார்ப்பனருக்குப் பிறந்தவர் என்றே விளங்கிவிட்டது என்றார்; அவர் நுழைந்த வீடு பார்ப்பனர் வீடு அன்று. இவர் சொன்னது பார்ப்பனரிடத்தில் அன்று. இதைக் கேட்ட பழனியாண்டி தம் கையில் கிடைத்ததை எடுத்து அடி அடி என்று அடித்தார். பிச்சை எடுத்த நாயே என்று திட்டினர்

புலவர் முண்டைக்கண்ணி ஆம்படையானுக்கு நோய் நீங்கிற்று. கண்கள் திறந்தன.

இப்போது புலவர்க்கு ஒய்ச்சல் ஒழிசல் கிடையாது. எங்கும் அழைப்பு! எப்போதும் கறுப்புச் சட்டை!

புரட்சிக்கவிஞரவர்களின்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

நாள் :		இடம் :
4—4—59	...	புத்திரகௌண்டன் —பாளையம்.
10—4—59	...	மதுரை
12—4—59	...	கோயம்புத்தூர்.
13—4—59	...	ஷை
15—4—59	...	சென்னை.
19—4—59	...	கரந்தைப் புலவர்கல்லூரி.

சென்ற இதழ்த் தொடர்ச்சி:–

தமிழும் பார்ப்பனரும்

புலவர், பழநிவேலன் பி. ஓ. எல். அரண்தாங்கி.

சென்னை மாநில முதலமைச்சராயிருந்த திரு. சி. இராசகோபாலாச்சாரியாகிய பார்ப்பனர், தான் அலுவல் ஏற்றதும் என்னசெய்தார்? தமிழ் வளர்க்க முற்பட்டாரா? – மாறாக இந்திமொழியைக் கட்டாய பாடமாக்கினார்.

அதுமட்டுமா? பள்ளிக் குழந்தைகளெல்லாம் பரம்பரைக் குலத்தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும்; அதற்காகப் பள்ளிக்கூடங்கள் அரை நேரம் நடத்தினால்போதும் என்றும்; அரை நேரம் தந்தையுடன் தம் தம் குலத்தொழிலைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் சட்டம் செய்தார். பெரியார் முதலிய தலைவர்கள் முன்வந்து போரிட்டதன் விளைவாக, அதுவும், திரு. காமராசர் ஆட்சி வந்தபிறகு, அம்முறை நீக்கப்பட்டது. அத்தோடு விட்டாரா? தமிழின் தலையிலும் கை வைத்துவிட்டார் ஆச்சாரியார். என்னவெனின் ஒவ்வொருவர் பெயருக்குமுன் மரியாதைக் குறிப்பாக 'ஸ்ரீ' என்று சட்டம் செய்துவிட்டார். 'திரு' என்று எழுதவேண்டுமென்று சட்டமியற்ற அவர் அவ்வளவு மொழிப்பற்றில்லாதவரா?

ஆனால் காமராசர் ஆட்சி வந்ததும் இன்னும் 'ஸ்ரீ' தான் இருந்து வருகிறது. மேலிடத்திற்கு அஞ்சிபோலும். இன்றுள்ள ஆரிய இன நாளிதழ்களாகிய 'இந்து', சுதேசமித்திரன் (சுயசாதி மித்திரன்) தினமணி, (இனமணி) முதலியவைகளும், அவைகளால் நடத்தப்படும் வார, மாத இதழ்களும் கட்டுப்பாடாக – பெயருக்கு முன் நாம் 'திரு' என்று எழுதியனுப்பினாலும் அதை விட்டு விட்டு 'ஸ்ரீ' என்றே அச்சிடுகின்றன. என்னே! ஆரியர்களின் தமிழ்ப்பற்று.

இன்னொரு வியப்புக்குரிய செய்தி பலருக்குத் தெரிந்திருக்காதென நினைக்கிறேன். அதாவது 'சுயசாதி மித்திரன்' என்ற நாளிதழில் முதல்பக்கத்தில் இருமருங்கும் இரண்டு குறட்பாக்கள் எழுதிக் கொண்டுவந்தார்கள்.

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.
உலகந்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

என்பவையே.

1948-ல் தந்தை பெரியார் அவர்கள் திருக்குறள் மாநாடுகள் நடத்தித் திருக்குறளை எல்லோரும் கற்கவேண்டும், போற்ற வேண்டும் என்று தீவிரமாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தத் தொடங்கியவுடன் அவ்விரண்டு குறட்பாக்களும் ஓடிவிட்டன. இப்போது இருக்கின்றனவா என்று கவனியுங்கள்.

பார்ப்பன ஏடுகள் எழுதும் செய்திகளிலும், கதை, கட்டுரை, கவிதைகளிலும் முக்கால் பங்கு தம் இனமொழியாகிய சம்ஃச்கிருதத்தைக் கலந்தே எழுதுகின்றன. மருந்துக்குச் சில தமிழ்ச்சொற்கள் அருகிப் பயன்படுத்தப்பெறும் இந்தி கட்டாய பாடமாக வைத்தபோது எந்தப்பார்ப்பன ஏடாவது கண்டித்து எழுதியதா? எந்தப்பார்ப்பானாவது சட்டமறுப்புச் செய்து சிறைக்குச் சென்றானா? இந்தியை எதிர்ப்பதற்கு மாறாக கற்பதற்கு முந்திக் கொண்டார்கள்– தமிழ் நாட்டில்வாழ வேண்டுமே, நாம் சிறுபான்மையினர்தானே என்று அமைதியாக இருந்துகொண்டு வடமொழியை வளர்க்கத் திட்டம் போட்டு வருகிறார்கள். இந்தியைக் கற்றுப் பட்டம் பெற்றுவருகிறார்கள். ஆரியர்க்கு அடிவருடிகளும், வடநாட்டானுக்கு வால்பிடிக்கும் சில தமிழர்களும் இந்தியை விரும்பிக் கற்றுத்தான் வருகிறார்கள்.

இன்னும் கவனியுங்கள்: இன்று தமிழ்மொழிப் போர் தொடங்கி "ஆகாஷ்வாணி"யை எதிர்த்து உண்ணாநோன்பிருந்தார்களே இரண்டு தமிழர்கள்; இளவழகன், அரங்கரத்தினம் என்போர். இதைப்பற்றி ஆரிய ஏடுகள் வாய்திறக்கவே இல்லை. ஆதரித்து ஒருவரிகூட எழுதவில்லை. ஆனால் 'ஆகாசவாணி' கன்னடமென்றும், எதிர்ப்பதில் பொருளில்லை யென்றும் மதுரையிலிருந்து இரண்டு பார்ப்பனர் இந்துவாகிய தம் சொந்த இன நாளிதழில் ஆசிரியர்க்குக் கடிதம் என்ற பகுதியில் எழுதினார்கள். அவர்கள் பெயர் தெரியவேண்டுமா? L.N.S. சுந்திரராமன், K.S பத்ராச்சாரியார். 21. 2. 59, 24. 2. 59 இந்து நாளிதழ்களில் திரு சுந்திரராமனும், திரு பத்ராச்சாரியும் முறையே ஆசிரியருக்குக் கடிதம் என்ற பகுதியில் 'ஆகாசவாணி' எதிர்ப்புப்போராட்டம் பற்றிக் கண்டித்து எழுதியுள்ளனர். தமிழ்நாட்டில்

தொடர் 15-ஆம் பக்கம்.

'மஞ்சரி' இதழின் குறும்புத்தனம்

"கயல்விழி"

நாள், கிழமை, திங்கள் இதழ்கள் அவ்வந் நாட்டின் மொழிநிலை, பண்பாடு, மக்கள் முன்னேற்றம் ஆகிய இவைகளையே முக்கிய நோக்கமாகக்கொண்டு பணியாற்றுதல்தான் முறையானதும் ஒப்புக்கொள்ளக் கூடியதும் ஆகும்.

ஆனால் நமது அருமைத் தமிழ்நாட்டில் உலவுகின்ற இதழ்களில் பெரும் பான்மையானவை மொழிக்கு ஆக்கமூட்டி வளம்பல நல்குவதாக அமைந்துள்ளனவா என்று காண்பதைவிட மொழி மரபுக்கு எவ்வெவ்வழிகளில் இழுக்கும், கீழ்மையும் கற்பிக்க முயன்றிருக்கின்றன; அதனது தூய்மையைக்கெடுக்க முயன்றிருக்கின்றன; என்பதைத் தான் காணவேண்டிய அளவுக்கு இழி நிலையில் உள்ளோம்.

இதற்கெல்லாம் மூலகாரணம் என்ன? என்பதை சற்றுக் காண்போமாயின் மேலே கண்ட அளவுக்கு 'நம்மை நாமே தாழ்த்திக்கொண்டோம், என்ற முடிவுக்குத்தான் வரவேண்டி இருக்கிறது.

இற்றைய நிலையில் செய்தித் தாள்கள், செல்வாக்குப்பெற்ற திங்கள், கிழமை இதழ்களில் 90 விழுக்காடு பார்ப்பனர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வருகின்றன.

வந்தேறிகளின் வளர்ப்பு மொழி தமிழாக இருந்த போதிலும், அவர்களது அருமைக்குழந்தை மழலை மிழற்றிப் பெற்றோருக்குப் பெருமகிழ்வைக் கொடுப்பது தமிழ்மொழியாயினும், வாழ்க்கை இன்பங்களை எஞ்சாது துய்ப்பதற்கு உறுதுணையாக இருப்பது தமிழ்மொழியாயினும் அவர்களது கண்களுக்குத் தெரிவதெல்லாம் வடமொழிதான்.

அந்தச் செத்தமொழியை மீண்டும் புதுக்கிச் சவ ஊர்வலம் நடத்துவதில் இன்பம் காண்கின்றார்களே ஒழிய, அவர்களது வாழ்வின் வளத்திற்கே காரணமான தமிழ்மொழி குன்றா இளமையோடு அழகுற்று எழில்பெற்று நிற்பது அவர்களது கண்களுக்குத் தெரிவதில்லை.

செத்த பிணத்திற்கு ஒப்பனை செய்து அதை வலம் கொணர்ந்து காட்டுபவர்கள், உயிருடன் அழகு பெருகி நிற்கும் அருமை மொழிக்கு,– என்ற தாய்க்கு- ஆக்கமூட்டி அரியணையேற்றுவித்துக் கண்குளிரக் காணுவிட்டாலும் அவளது வாழ்வை வெட்டி வீழ்த்தி அற்றொழிக்காமல் இருக்கக்கூடாதா?

அவ்வாறு செய்பவர்களும் உண்டா? என வியப்பு மேலிட்டால் கேட்கலாம். ஏன் இல்லை? பார்ப்பன இனத்தின் கடைசிப்பூண்டு இருக்கும் வரை அந்தத் துரோகச் செயலும் அழியாது; ஒழியாது.

'மஞ்சரி' என்னும் திங்கள் இதழ் ஒன்று. ஐ. என். இராமரத்தினம் என்னும் பார்ப்பனனை ஆசிரியராகக்கொண்டு வெளிவருகிறது. வெளிவருவது தமிழ்மொழியில். விற்பனையாவது தமிழர்களிடத்தில். இதன் மூலம் அவரது வாழ்வு வளம் பெறுவது தமிழரது பணத்தால். ஆயின் கேடு செய்வது தமிழ் மொழிக்கு. இந்த அளவுக்கு ஓர் இழிசெயலை, கயமைப் பண்பை உலகில் வேறு எந்த இனத்திடத்தும் கண்டதில்லை. காணப்போவதும் இல்லை.

பிறமொழிச் சொற்கள் ஒரு மொழியினிடத்துக் கலக்கும்பொழுது அந்தமொழியின் தூய்மையும் நீர்மையும் கெட்டுச்செம்மைப் பண்பு சீரழிந்து விடும். தேவையும் பயனும் நோக்கி இல்லாத சொல்லை, அல்லது அந்த மொழிக்குப் புதுச்சொல் படைத்து வழங்கும் ஆற்றல் இல்லாத பிற மொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கலாம்.

ஆயின் ஆடம்பரத்திற்காகவும், அலங்காரத்திற்காகவும் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதும் ஏற்புடையதும் மொழிநூல் வல்லார் ஒப்புக்கொள்ளக் கூடியதும் அல்ல.

அழுக்காறு என்பது சிலருக்குப் பிறவியிலிருந்து தொடங்கி இறப்புவரையில் நீடிக்கும். தங்களது சமக்கிருதம் செத்துமாய்ந்த நிலையில் தமிழ் மொழிமட்டும் இளமை தவழ உலவி வர-அது கண்டு நாம் வாளா இருப்பதா என்னும் கீழ்த்தர எண்ணத்தால், வடமொழிச் சொற்கள் பலவற்றையும் அல்லது வேறு எந்த பிறமொழிச்சொற்களையும் எந்தெந்த வழிகளில் கலந்து அம்மொழியின் அழகை – உயர்வை – நீர்மையை அழிக்க ஒல்லுமோ அவையனைத்தையும் எஞ்சாது செய்தனர் – செய்கின்றனர் – இனியும் செய்வர்.

வாங்காதீர்! எழுதாதீர்!!

உ. வே. பாலு.

இன்று - செல்வத்தில், செழுமையில், விஞ்ஞான ஆராய்ச்சியில், வரலாற்றுத்துறையில், புதுமைகள் பூத்துக் குலுங்கும் புத்திலக்கியப் படைப்பில் புகழொடு விளங்குவதாகக் கூறிக்கொள்ளும் மேலை நாட்டார், தங்கள் உணர்வாலும் உணரலாகா அத்துணை இருள் செறிந்து விளங்கிய காலத்தில் வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் உலக அரங்கில் உயர்ந்து விளங்கி, உலகத்தார்க்கெல்லாம் ஆன்ற அறிவளித்து, அவர் உயிரை ஓம்பி, அறிவில், ஆற்றலில், பொன்னில், பொருளில் நாகரிக நற்பண்பில் தனிசிறந்து, நல்லாட்சிக்கோர் எடுத்துக்காட்டாய், அறவொளி வீசும் பெருநாடாய்ப் பெருமையுற்றிருந்தது. ஆனால் இன்றோ ஆட்சியிழந்து, கலையிழந்து, மொழிமறந்து, தனக்குற்ற மாட்சியெல்லாம் மறைய அல்லலுறுகிறது.

தமிழகத்தின் இவ்வீழ்ச்சிக்குக் காரணம் மாடோட்டிவந்த நாடோடிகளான ஆரியப் பார்ப்பனர்கள் என்பதைவிட, தமிழர்களிடையே நிலவிவந்த "யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற பரந்த நோக்கமே காரணமெனலாம். இல்லையென்றால் விழியொத்த மொழித்துறையில் நம்மையடுத்துக் கெடுக்கவந்த ஆரியர்களைக் கை வைக்க அனுமதித்திரார்.

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் சற்று விழிப்புடன் இருந்திருப்பார்களேயானல் கொடிகட்டி வாழ்ந்த தமிழர்கள் இன்று தில்லியின் பிடிக்குள் அகப்பட்டுத் திணற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

"இனத்தையழிக்க மொழியையழி" என்ற மேனாட்டார் மொழிக்கொப்ப, சீரிளமைத் தமிழ் மொழியின் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஐங்குறுநூறு ஆகிய சங்க இலக்கிய நூற்களில் கடவுள் வாழ்த்து என்ற பெயரால் பெருந்தேவனார் கை வைத்தார். உரைவிளக்கம் என்ற பெயரால் பரிமேலழகரும், நச்சினார்க்கினியரும். திருக்குறள், தொல்காப்பியம் முதலிய நூல்களின் மூலக்கருத்தை மக்கள் புரிந்துகொள்ளாவண்ணம் சிதைத்தனர் தெய்வக் கதைகளின் பெயரால் சேக்கிழாரும் கம்பரும், வில்லிபுத்தூராரும் தமிழர்களின் ஒழுக்கத்தை அழிக்க அடிகோலினர். இம்மட்டோடாவது ஒழிந்ததா என்றால் இல்லை. இவர்களின் அடிபற்றி நேற்று கோபால கிருஷ்ணமாச்சாரி, டி. கே. சி வையாபுரிப் பிள்ளை ஆகியோர் ஆரிய ஏடுகளான ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், தினமணி, சுதேசமித்திரன் முதலியவற்றின் துணைகொண்டு இத்திருப்பணியில் ஈடுபட்டனர். இன்றும் மொழியாராய்ச்சி என்ற பெயரால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சில தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் ஒழிப்புப் பணியில் நாம் மேற்குறித்த ஆரிய ஏடுகளின் ஆதரவில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். எனவேதான் தந்தை பெரியாரவர்கள் நாடோறும், தவறாது, பார்ப்பன ஏடுகளை வாங்காதீர் என்று கூறிவருகிறார்.

அக்ரம ஆரிய ஏடுகள், பார்ப்பனச்சேரிகளில் அம்மாமிகள் பேசும் நடையில், பகுத்தறிவைப் பாழ்படுத்தும் வகையில், கதை கட்டுரை வெளியிட்டு வந்ததுஉண்மைதான். ஆனால் இன்றோ பி. ஸ்ரீயைக் கொண்டு சித்திர ராமாயணம் தீட்டிவந்த விகடன் பேராசிரியை இந்திராவைக்கொண்டு சித்திரச் சிலம்பு வெளியிடுகிறது. 'ஜெய்ஹிந்து' என்று எழுதிய கல்கி 'திராவிடநாடு வேண்டும்' என்று தலையங்கம் எழுதுகின்றது; அதிலே கண்ணன் காட்டிய வழியைத் தீட்டிவந்த ஆச்சாரியார் வள்ளுவன் குறளுக்கு உரை வகுக்க ஆரம்பித்திருக்கிறார். மேலும், ஒரு காலத்தில் சாஸ்திரிகளும் சர்மாக்களும் எழுதிவந்த இடத்தில் தமிழ்ப் பேராசிரியர்களான மு. வரதராசன், அ. ச. ஞானசம்பந்தம், மா. இராசமாணிக்கம் போன்றோர் அவ்வப்போது அரிய கட்டுரைகளை எழுதி வருகின்றார்கள். அப்படியிருக்க இன்று பார்ப்பன ஏடுகளை வாங்காதீர் என்று பெரியார் கட்டளையிடுகிறாரே இது சரியாகுமாஎன எண்ணும் தோழர்களை ஏமாற வேண்டாம் என எச்சரிக்கிறோம்.

மாதாந்திரச் சிறுகதைப்போட்டி என்று கூறி, கல்கி திங்கள்தோறும் ரூபாய் நூறு அளித்து வருவதும் கதிர் கலைமகள் போன்றவை அவ்வப்போது புதுப்புது பரிசுத்திட்டங்களை வெளியிடுவதும், தமிழ் நாடக இலக்கியத்திற்குத் தொண்டு செய்யவே சிறந்த நாடகங்கள் இரண்டிற்கு ரூபாய் இருபத்தையாயிரம் வழங்க விகடன் முன்வந்திருப்பதாகக்கூறுவதும், கடந்த முப்பதாண்டு காலச் சுயமரியாதை இயக்கப் பிரச்சாரத்தின் பயனாய் வீழ்ச்சியுற்று வரும் விற்பனையைச் சரிகட்டிக்

தலைநகரில்...

பலகையில் மெரினா காண்டீன் என்றிருந்தது. உள்ளே போகலாமா அல்லது வெளியவே நின்று விடலாமா என்றாகி விட்டது. பசியோ வயிற்றைக் கிள்ளியது சரிபோவோம் என்ற முடிவின்மேல் பரி மாறுபவனை அழைத்து என்ன இருக்கிறது எனக் கேட்டேன். அவன் ரவா கேசரி, குலாப்ஜான், பங்களாபாத். டில்லிபாதுஷா, காஞ்சிபுரம் இட்லி என்று வரிசையாக அடுக்கி கொண்டு வந்து நிறுத் தினான். கடைசியாக ஒன்று சொன்னாயே அது என்ன என்றேன். மறுபடியும் முதலிலிருந்து அவன் மனதிற்குள் சொல்லி வந்து கடைசியாக நான் சொன்னது காஞ்சிபுரம் இட்லி சார்! என்றான் இதாவது தமிழ்ப்பெயராக உள்ளதே என்றெண்ணி காஞ்சிபுரம் இட்லி இரண்டு கொண்டுவா என்றேன்.

ஏங்க! டில்லி பாதுஷா இன்று தான் ஸ்பெஷ லாக போட்டது என்றான்.

சரிதான்! உன் வாயிலே கூட இந்தியும், ஆங்கிலமும் நாற்றம் அடிக்கிறதே! இது சென்னை யின் மகிமை போலும்!

என்னங்க! டில்லி பாதுஷா கொண்டு வரட் டுமா என்றான் மீண்டும்!

நான் சற்று எரிச்சலுடன் டில்லி பாதுஷாவும் வேண்டாம்! நேரு பாதுஷாவும் வேண்டாம் வெறும் காஞ்சிபுரம் இட்லியே கொண்டுவாப்பா என்றேன். கூட இருந்த நண்பர் நீ சென்னையை இது வரையில் தான் பார்த்திருக்கிறாய். இன்னும் பார்க்க வேண் டியது எவ்வளவோ உள்ளதே என்றார். பிறகு அதை விட்டு, ஒரு பூங்காவில் நுழைந்தோம். காற்றுச் சில்லென வீசிற்று. ஆம்! அது தென்றல் காற்று! இந்தக் காற்றிலாவது தமிழ் உள்ளது. இந்த சென்னையில் தமிழையே காணோமே! மக்கள் ஒருசிலர் பேசுவதைத் தவிர, மற்ற இடங்களில் மாற்று மொழியின் நாற்றமே வீசுகிறதே! நல்ல தமிழ் நாட்டின் தலைநகர்! நல்ல வேளையாக அங்கு ஒருவன் கடலை. பட்டாணி, சுண்டல், இடியப்பம் என்ற தமிழ்ச் சொற்களை ஒலித்தவாறு வந்தான். அதில் சிறிது கடலையும், சுண்டலும் வாங்கியுண் டோம். அதில் தமிழ்ச்சுவை நிரம்பி இருந்தது தமிழ் மணம் வீசிற்று.

(அடுத்த இதழில் முடியும்)

கொள்ளவே ஒழிய தமிழ்ப் பற்றின் மிகுதியால் அல்ல என்று எண்ணித் தெளியவேண்டுகிறோம். உண்மையான தமிழ்த் தொண்டாற்றக் கல்கி கூட்டம் கருதியிருக்குமேயானால் சிறந்த தமிழ் எழுத்தாளர்களான பகீரதன், சோமு, ஓவியர் மணியம் முதலானோர் அண்மை யில் வெளியேற்றப் பெற்றிருக்க மாட்டார்கள். எனவே தமிழ்ப் பெரு மக்களைப் பார்ப்பன ஏடுகளை வாங்காதீர் வாங்காதீர் என்று கேட்டுக்கொள்வ தோடு தமிழர் வழிவந்த தமிழ்ப்பேரா சிரியர்களையும் தமிழ் எழுத்தாளர் களையும் ஆரிய ஏடுகளில் எழுதாதீர் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளு கின்றோம்.

வெளிவந்துவிட்டது!

★ புரட்சிக்கவிஞர், பாதிதாசன் அவர்களின் தனித்த மதிப்புரையைப் பெற்ற செந்தமிழ்க் காவியம்.

★ "தமிழ் முரசு" வாயிலாய் மலாயாவாழ் தமிழர்களை மகிழ்வித்த இலக்கிய விருந்து

★ கபிலரின் "குறிஞ்சிப்பாட்டைப்" பயில விரும்பும் தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு விளக்க நூல்.

நாகை, என், பி. காளியப்பன் அவர்களின் மூத்தமகன் கா. சம்பந்து அவர்கள் எழுதிய

"சினவாதே!"

என்னும் காவியம் வெளிவந்துவிட்டது.

விலை ரூ. 1-25. (அஞ்சற் செலவு தனி)

★ விற்பனையாளர்க்கு 25% கழிவு உண்டு

விவரங்களுக்கு :—

நிர்வாகி

கபிலன் பதிப்பகம்

மதுக்கூர் தஞ்சை மாவட்டம்.

மணிப்பேய்

வித்துவான், பா. முத்து புதுவை.

சிற்றூரின் அருகினிலே ஒருகாடாம்; மக்கள்
செல்வதில்லை அவ்வழியின் பக்கத்தே; நாளும்
கற்கள்பல வெண்கலத்தின் மீதெறிந்தாற் போலக்
கலகலக்கும் மணிஓசை காட்டிடையே கேட்கும்;
"குற்றுயிராய் மனிதர்களைக் கொன்றுதின்னு கின்ற
கொடும்பெரும்பேய் உணவுண்ணும் நேரமிதே!" என்றார்;
கற்பனையை உண்மையென நம்புகின்ற காலம்
கதைகதைத்த திவ்வாறு! நம்பிவிட்டார் மக்கள்!

ஊருக்கு முற்றுகையாய் இந்நிகழ்ச்சி மாற
ஒருபொருளும் கிடைக்கவில்லை; புழுங்குகின்றார் மக்கள்;
போருக்குக் களனாக நிலைபெற்ற தவ்வூர்
போக்குவர வற்றதுவே; அரசியலார் கண்டார்;
ஆரொருவன் அதிர்மணியின் உண்மைஆய் வானே
அவனுக்குப் பரிசென்றார்; இப்புரட்டின் ஆணி
வேருக்கே வெடிவைக்கும் ஒருகிழவி; காட்டில்
விறகொடித்தல், சருகெடுத்தல் அவள்தொழிலாம்: வந்தாள்;

"அரசியலின் தலைவர்களே! பெருவணக்கம்! உண்மை
ஆய்ந்துணர்த்த வந்துள்ளேன்: எனையேற்பீர்! நாளைத்
திரள்வாழைக் கனிகளிலே இருகூடை தேவை;
திறனுள்ள ஒருசிலரும் வருகவென இன்றே
முரசொன்றும் அறைந்திடுக! விளக்கமுற உம்கண்
முன்னிலையில் யாவையுமே காட்டுகிறேன்" என்றே
நரைதலையள் மூதாட்டி உரைத்திட்டாள்: காட்டில்
நடந்தபல நிகழச்சிகளை அடுத்துவரக் காண்பீர்!

அடுத்தநாள் கூட்டாக மணிதர்சிலர் சென்றார்:
அக்கிழவி முன்சென்றாள்: அரசியலார் சென்றார்;
எடுத்தாளப் பெருங்கிழவி சிலவாழைச் சீப்பை
எறிந்தாளக் காட்டிடையே! பாருங்கள்! என்றாள்
அடுக்காகப் பலகுரங்கு பழச்சீப்பைத் தூக்க
அங்குமிங்கும் சிலதாவும்: மணிஒலித்த தெங்கோ!
துடுக்கான சிலகுரங்கைக் கையில்மணி யோடு
தொலைவினிலே கண்டார்கள்: ஆர்ப்பரித்தார் மக்கள்!

மணிக்குரங்குச் சிறுகூட்டம் வந்தனபார்! வந்தே
மணிவிடுத்துப் பழச்சீப்பை மகிழ்வோடு கையால்
துணிவுடனே தூக்கினபார்! பலத்தகைத் தட்டல்!
தூரத்தே மீண்டுமவை பறந்தனவாம்: அந்த
மணியொன்றைக் கையெடுத்து மூதாட்டி சொல்வாள்:
"மாண்புடைய பெரியோரே! குடிமக்காள்! இந்த
மணியொலிக்கும் வரலாற்றின் ஒருபகுதி கண்டீர்
மற்றுமொரு பகுதியுண்டு சொல்லுகிறேன் கேளீர்!

"ஆண்டுபல முன்னரிந்த ஊரிலொரு கள்வன்
அளவற்ற பொருள்களையும் கோயிலினுள் சென்றே
ஆண்டுள்ள அணிகளையும் மணிகளையும் வாரி
அடர்காட்டின் உட்சென்றான்; நள்ளிரவில் அங்கே
நீண்டபெரும் பாம்பொன்றால் கடிபட்டான்; செத்தான்
நிகழ்ந்ததிதே: அப்பொருளைக் குரங்குகளே தூக்கி
வேண்டுமட்டும் விளையாட விளைந்ததிவை யாவும்"
எனச்சொன்னாள் எழிற்பரிசும் பெரும்புகழும் பெற்றாள்.

"The missing bell"
என்ற ஆங்கிலச் சிறுகதையின் தழுவல் ★

'மஞ்சரி' இதழின் குறும்புத்தனம்...

ஒருவன் தனது வாழ்விற்கு வேண்டியபடி அளவுவிழுமிய நிலையில் நிதி நிலை பெற்றவனாக உள்ளான் அவன். பிறரிடம் கடன் வாங்கி வாழவேண்டும் என்னும் அவசியம் இல்லை. எனினும் பிறிதொருவன் பொருள்பலவற்றை அவனிடம் நீட்டி இதைப் பெற்றுக்கொள் கடனாக: ஆயின் திருப்பித்தர வேண்டியதில்லை, எனில் அது வாங்குபவனுக்கே இழுக்கு: கொடுப்பவனுக்குகோ உயர்வு என்பதை நாம் அறிவோம்.

இதுபோலத்தான் வேண்டுமளவு தமிழ் மொழியில் சொற்றொகுதிகளும் மரபுச் சொற்களும் மண்டிக் கிடக்க வடமொழியிலிருந்து தமிழ் மொழிச்சொற்களைக் கடன் வாங்கிற்றென்றால் அதற்கு என்ன பொருள்? ஆயின் உண்மையில் தமிழ்மொழி வட மொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியதா? அன்றி வாங்கும்படி வலியுறுத்தப்பட்டதா? என்றுகாணின், அது பார்ப்பனர்களால் வலிந்து புகுத்தப்பட்டது என்பது தெளிவுறத் தெரியும்.

இந்த வடமொழிப் படையெடுப்பிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள நாம் தொடங்கிய ஒரு மிகச்சிறிய முயற்சியே ஆகாஷ்வாணிக்கிளர்ச்சி,

இதைப்பற்றி "மஞ்சரி" மார்ச்சுத் திங்கள் இதழில் 'ஊரும் உலகமும்' என்ற தனது தலையங்கத்தில் தீட்டியிருக்கும் கீழ்வரும் உரையை நோக்குக.

"தமிழில் பட்ஜெட் பேச்சு: சென்னை நிதிமந்திரியின் அடுத்த பட்ஜெட் பேச்சைத் தமிழிலேயே தயார்செய்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்போகிறார்களாம். 1956 சென்னைத் துரைத்தன மொழிச் சட்டப்படி சபையின் நிகழ்ச்சிகளைத் தமிழிலேயே நடத்தத் தீவிரநடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சென்னை மேல்சபையில் சில தினங்களுக்குமுன் ஒரு தீர்மானம் வந்தது. ஏற்கனவே தமிழையே பெரும்பாலும் துரைத்தன விஷயங்களில் வழங்கி வருவதாக நிதிமந்திரி விளக்கியதால் தீர்மானம்

வாபஸாயிற்று. காலேஜுகளில் தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் போதிக்கவழிகோல, ஒரு கமிட்டியைச் சர்க்கார் அமைத்திருக்கிறது. இந்தச் செய்திகளெல்லாம் ரஸமானவைதான். இதேசமயம் திருச்சியிலும் சென்னையிலும் ஆகாஷ்வாணியின் பெயரை மாற்ற உண்ணுவிரதங்கள் நடந்தன.

ஆகாஷ்வாணி என்பதுடன் வானொலி என்பதையும் ரேடியோவில் இப்போது சேர்த்துச் சொல்லிவரத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் இவற்றாலெல்லாம் நவீன நிலைமைகள் அனைத்துக்கும் ஏற்றபடி, புதிய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்யக்கூடியபடி தமிழ் வளர்ந்து விட்டதாக நாம் அக மகிழ்ந்துவிட முடியாது. பிற மொழிகளின்மீது விரோதம் தொலையவேண்டும். லட்சம் லட்சமாய் புதியசொற்கள். தமிழிலே இடம்பெற வேண்டும் வாக்கிய அமைதியிலும் மரபிலும் புதியசொற்களை ஏற்றுத் தன்மயமாக்கிக்கொள்ளும் ஆற்றலிலும்தான் இருக்கிறது தமிழின் வளர்ச்சி — எனவே இன்று தமிழின் வெற்றிஎன்று பாவிக்கும் சில நிகழ்ச்சிகள் தமிழுக்கு நன்மை அன்றித் தீங்கு விளைக்கக்கூடும் நிதானத்தோடும் எச்சரிக்கையோடும் நடந்து கொள்வது அவசியம்.

சென்னைச் சட்டமன்றம் தமிழில் இயங்கக் கூடாது. கல்லூரிகளில் தாய்மொழியில் பாடங்கள் நடைபெறக் கூடாது. வானொலி நிலையத்தில் ஆகாஷ்வாணி மட்டும் ஒலிபரப்பப்பட வேண்டும். வானொலி என்பது திரும்பப்பெற வேண்டும். பிற மொழிச் சொற்களை குறிப்பாக ஆகாஷ்வாணி போன்ற வடமொழிச் சொற்களை எந்தவிதத் தடையுமின்றி அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் — இது அந்த இதழின் கரைகடந்த ஆசை.

மேலும் அது தமிழ்மொழிக்குச்செய்து வரும் உயரிய தொண்டை, மேலே நாம் கண்ட அந்தத் தலையங்கத்திலிருந்தே காட்டுகின்றேன். பட்ஜெட், தயார், துரைத்தனம், சபை, விஷயம், வாபஸ், காலேஜு, கமிட்டி, ரஸமானவை, ரேடியோ, பூர்த்தி. சரியாக மொத்தம்பத்து வரிகள்கூட இல்லை.

அதில் இவ்வளவு வேற்றுச்சொற்களைக் கலந்து இதையே வழங்கு சொற்களாகமாற்றி, பின்னர் தனி நடையில் எழுத முயலும்பொழுது அது இயல்புக்கு ஒவ்வாததாக அமைகிறது என்று கூறும் அதன் தந்திரச் செயலையும், நரித்தன்மையையும் எண்ணுக.

புதுவையரசு செய்தித் தாளினர் ஒற்றுமைச் சங்கம்.

மார்ச்சு 22-ம் நாள் "செல்வா லாட்ஜில்', பொதுவுறுப்பினர் கூட்டம் கூடியது. அது போழ்து புதியனவாக இயற்றிய சட்ட திட்டங்கள் ஆராய்ந்தபின் ஒப்புக்கொள்ளப் பட்டன.

அதன்பின்னர் நடைபெற்ற செயற்குழுத் தேர்தலில்:

தலைவர் : **கவிஞர் திரு, பாரதிதாசன்**
ஆசிரியர்: 'குயில்'

செயலாளர் : **திரு, வி. எஸ். மணி**
(செய்தியாளர் 'இந்து')

பொருளாளர் : **திரு, அதிசயம்**
(ஆசிரியர்: லாஉவாநுவேல்)

உறுப்பினர்கள் : **திரு, கோ. கிருஷ்ணராஜ்**
(ஆசிரியர்: 'தமிழ்முரசு')

,, **திரு, பழநிதுரைசாமி**
(செய்தியாளர்: P. T. I.)

எனத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

வெளிநடைமுறைக் குழுவிற்கென :
திரு. பாரதிதாசன், திரு. வின்சென்ட்ராவ்.
திரு. ரங்கநாதன், திரு. உசேன்,
திரு. அதிசயம்,
ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எனவே நன்றி என்பதே சிறிதும் இல்லாத அந்த இனத்தானுக்கு நாம் ஆதரவு காட்டுதல் நம் தலையில் நாமே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டதை ஒக்கும். அது எவ்வளவு உயரிய கருத்துக்களைக் கொண்டதாயினும் சரி — பார்ப்பனர் இதழ்களாயின் கூடியவரையிலும் நீக்க முயல்வது ஒவ்வொரு தமிழனும் தன்னைத் தானே திருத்திக் கொள்வதாகும். எனவே தெளிக; திருந்துக.

தமிழும் பார்ப்பனரும்...

இருந்துகொண்டு தமிழால் பிழைக்கிறவர்கள் தமிழுக்கு இழுக்கு நினைக்கவும் எழுதவும் எவ்வளவு துணிவு இருக்கவேண்டும்!

இதனால்தான் பெரியார் அவர்கள் தமிழர்கள் பார்ப்பனச் செய்தித் தாட்களைப் படிக்கக்கூடாது என்றும், பார்ப்பான் மணியடிக்கும் கோயிலுக்குப் போகக்கூடாதுஎன்றும் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். தமிழர்கட்கு இனவுணர்ச்சி மொழியுணர்ச்சி, இருந்தால் போகமாட்டார்கள்; படிக்கமாட்டார்கள். பார்ப்பான் நடத்தும் உண்டி விடுதிகட்குப் போகக்கூடாது என்பதும் பெரியாரது நெடுநாளைய வேண்டுகோள். தமிழ் மக்கள் உண்மையை உணருங்காலம் அண்மையில்தான் உள்ளது.

மேலும், எந்தப்பார்ப்பானாவது தன் பெயரைத் தமிழில் வைத்திருக்கிறானா? என்று பாருங்கள் பேசும்போது தமிழில்தான் பேசுகிறார்களா? நேக்கு நோக்கு, நன்னாருக்கு, சொல்றேள், சௌக்கியமோன்னோ, என்ன விசேஷம், வந்துட்டேளன்னோ போன்று தமிழைச்சிதைத்தும், சம்ஃச்கிருதச் சொற்களைக் கலந்துமே பேசுகிறார்கள். உனக்கு, எனக்கு என்று சொல்வது கடினமாகவா இருக்கிறது? இல்லை. அவர்கள் "குலாச்சாரம்"

இங்ஙனம், ஆரியப்பார்ப்பனர் தொன்றுதொட்டு தமிழுக்குச் செய்துவரும் தீங்குகள் பலப்பல. எத்தனையோ தமிழ்நூல்களை ஒழித்து வடமொழி நூல்களையும், புராணங்களையும் நம்மிடையே பரப்பிவிட்டனர் இன்னும் பரப்பிக்கொண்டு வருகின்றனர். "இராமாயண கதா காலட்சேபமும், இராமபஜனையும், கீதாகாலட்சேபமும் நிகழ்த்திக்கொண்டுதானே வருகின்றார்கள். தமிழ்க்காப்பியங்களையோ, இலக்கியங்களையோ படித்தாலும் அவற்றிலுள்ள கருத்துக்களைப்பற்றிப் பேசுவதேயில்லை, எங்காவது பேசவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அதிலும் கீதை, இராமாயணம், பாரதக்கருத்துக்களைச் சான்று காட்டித்தான் தமிழுக்கு விளக்கங்கூறுவார்கள், கூறுகிறார்கள். பார்ப்பனரின் தம்மொழிப்பற்று பாராட்டிற்குரியதே. அதேநேரத்தில் தமிழர்களின் மொழிப்பற்றின்மை குறித்து வருந்தாமலிருக்க முடியவில்லை. பார்ப்பனர் தமிழ்வளர்க்கும் வித்தையான் காட்டிய சில சான்றுகொண்டு தமிழர்உய்த்துணர்வார்களா? வாழிய செந்தமிழ்! வாழிய நற்றமிழ்! வாழிய தனித் தமிழ்நாடே!

∝★∝

இந்தி எதிர்ப்புச்சிந்து!

புலவர், புதுமதியன். புதுப்பாளையம்.

தந்திரமாய் இத்தப் பாரில் – பொதுப்
பேரில் – இந்தி
தழையவிட்டார் தமிழ் ஊரில் – அது
தனிப்பேறுள தமிழ்மாய்ந்திடப்
பனிநீரெனச் சுடுநீரதைப்
பாய்ச்சுவதே தமிழ் வேரில் – எழும்
பைந்தமிழ் காப்போமிப்போரில்!

செந்தமிழாம் எங்கள் மாது – உள்ள
போது – இந்தி
சேர்ந்திட வைப்பதும்ஏது? – அது
செழுமைசெயும் தமிழ்மானிலம்
செகமீதினில் உருவாகிடச்
செப்பவொணாப் பெருந்தீது! – போர்
செய்திடுவோம் இந்தி மீது!!

சந்தச்சுவைத் தமிழ்கண்டு – குமணா
– னுண்டு – தலை
இதற்கலவோதந்தான் பண்டு! – நமக்(கு)
இழிவேதரு மொழியாமிந்தி
அழிவேசெய வரும்வேளையில்
இருப்பதுவோ மனங்கொண்டு – கொன்று
ஒழிப்பதன்றோ தமிழ்த்தொண்டு!

இந்திக்கிளைஞர்கள் சிங்கம் – எதிர்த்(து)
எங்கும் – தமிழ்
இளமைக்குருமலே பங்கம் – செய்வோம்
இயலோடிசை கடமேவளர்
இயல்பேந்திடு பழைமைப்பேர்
இன்பத்தமிழ் நறுஞ் சங்கம் – அது
இன்பங்கள் மேவுசுரங்கம்!!

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ.100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0-15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

குயில்

Regd No. M. 7030.

சிறுவர் பகுதி

எலிக்குஞ்சும் பூனைக்குட்டியும்

பானை இடுக்கில் எலிக்குஞ்சு - தனைப்
பார்த்து விட்டது பூனைக்குட்டி!
நான்நான் என்றது பூனைக்குட்டி, - அங்கு
ஞைஞை என்றதே எலிக்குஞ்சு!

போன தப்புறம் எலிக்குஞ்சு - நேர்
போன தங்கும் பூனைக்குட்டி
ஏன்ஏன் என்றது பூனைக்குட்டி, - பானைக்
கிப்புறம் வந்ததே எலிக்குஞ்சு!

பானை மேலே எலிக்குஞ்சு - தொத்தப்
பார்த்து விட்டது பூனைக்குட்டி
பானை மேலும் பூனைக்குட்டி - வரப்
பாய்ந்த துள்ளே எலிக்குஞ்சு!

பானை எண்ணெயில் எலிக்குஞ்சு - கூடப்
பதை பதைத்தது பூனைக்குட்டி
தானே செத்தது பூனைக்குட்டி - தான்
தன்னால் செத்ததே எலிக்குஞ்சு!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.

அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.